மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இம்மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தபபட்டிருக்கிறது.

7. அவையுரிமைக் கேள்வி

அவையின் முடிவிற்குக் காத்திருக்கும் ஒரு பொருள் குறித்து, முன் னறிவிப்பின்றி அவையுரிமைக் கேள்வி எழுப்ப அனுமதி கோரல்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I raise on a matter of privilege. This is a matter pending before the House.

MR. DEPUTY SPEAKER : Even then you have to give me notice for bringing a privilege motion.

THIRU K. RAMAMOORTHY : No. Sir, it pertains to a matter pending before the House. The proviso to Rule 184 says—

Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice.

MR. DEPUTY SPEAKER : So it is a power vested in the Speaker and not the Hon. Member. Under the proviso to Rule 184, the Speaker has the power to waive such notice and not any Hon. Member.

THIRU K. RAMAMOORTHY : I have to make it known to the Hon. Speaker. Only then the Speaker can define whether he could waive notice or not, since it pertains to a matter pending before the House.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விதியிலே தெளிவாகக் குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அவையெல்லாம் இந்த மன்றத்திலே எழுப்பப்பட்டு அரசியலமைப்புச் சட்டமெல்லாம் இழுக்கப்பட்டு திருத்தப் பட்டு இருக்கின்றன ரிட்டன் நோட்டிஸ் முன்னாலே கொடுக்காமல் இருப்பதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிக்கிணங்கக் கூடத் தலைவர் அவர்களின் அனுமதியிருந்தால்தான் அப்படி எழுப்ப லாம். தலைவர் அவர்களின் அனுமதியில்லாவிட்டால் எழுப்ப முடியாது.

THIRU K. RAMAMOORTHY : I may bring it to the notice of the Hon. Speaker. It is for the Hon. Speaker . . .

MR. DEPUTY SPEAKER : I have already told that you must give me notice, even if you want to bring a privilege motion under Rule 184.

THIRU K. RAMAMOORTHY : You must hear me.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கொண்டு வருவதற்கு நான் அனுமதி தரவில்லை. நீங்கள் மறுபடியும் எழுந்திருப்பது சரியல்ல. அடுத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

THIRU K. RAMAMOORTHY : I must be allowed to explain . . .

MR. DEPUTY SPEAKER : You can give me notice and bring it tomorrow. You cannot raise it now.

THIRU K. RAMAMOORTHY : This refers to a matter pending . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Are you going to allow him to speak after your ruling?

MR. DEPUTY SPEAKER : No.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்சவரம்பு குறைத்தல்) மசோதாவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். The Hon. Minister has introduced the Bill . . .

MR. DEPUTY SPEAKER : The Hon. Minister has only moved a motion for leave to introduce the Bill. The motion is before the House.

மோஷன் மூவ் பண்ணியதற்குப் பிறகு அதன் மேல் ஓட்டெடுப்புத் தான் நடைபெற வேண்டும். இந்த நேரத்தில் நீங்கள் எப்படிப் பேச முடியும்?

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீதான உச்ச வரம்பு குறைத்தல்) மசோதாவை, உறுப்பினர்களுக்கு மசோதாவின் படிவத்தை வழங்காமலும், குடியரசுத் தலைவரின் முன் அனுமதியின்றியும் அறிமுகம் செய்ய அரசுக்கு உள்ள அதிகாரம் குறித்து.

(Dr. H. V. Hande: rose in his seat.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீங்கள் பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மசோதாக்கள் அறிமுகப்படுத்தப் படும்பொழுது பரம்பரையாக இருந்து வருகிற பாரம்பரியம், கன்வென் ஷன், அது எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து கொண்டுவரப்பட்டாலும் அல்லது அரசாங்கத் தரப்பிலேயிருந்து கொண்டுவரப்பட்டாலும்—அப் பொழுது விவாதிப்பதில்லை, எதிர்ப்பதில்லை. என்று முடிவு செய்திருக் கிறோம. கனம் உறுப்பினர் அவர்கள் சட்டப்பிரச்னை எழுப்பலாம் என்று நினைக்கிறார்கள். எந்தச் சட்டப் பிரச்னையாக இருந்தாலும் நாங்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம். எதிர்க்கட்சி எழுப்பினாலும் சரி,